# கடவுள்களின் திருவிளையாடல்கள்

சிவன் மார்க்கண்டனுக்குப் பதினாறு வயதளித்த பின் என்றும் பதினாறாகக் கொடுத்தோமென்றதும், சுந்தரமூர்த்தி நாயனார் விவாக காலத்தில் சிவன் சென்று அடிமையென்று பொய்ச்சாதனம் செய்ததும், விஷ்ணுவானவர் பொய் வேடமிட்டு மகாபலிச் சக்கிரவர்த்தியிடஞ் சென்று மூவடிமண் தானங்கேட்டதும், திருப்பாற்கடல் கடைந்தபோது விஷ்ணு அசுரர்களுக்கு அமுதபாகங் கொடுக்கிறேனென்று சொல்லிப் பின்னர் கொடாது போனதும், பாரத யுத்தத்தில் கிருஷ்ணன் பிராமண வேடமிட்டு கர்ணனிடஞ் சென்று தான் பிராமணனென்றும், மேருமலைத் தவமுனி என்று தானம் வாங்கியதும் கடைந்தெடுத்த பொய்மொழியல்லவோ? விஷ்ணு தன் மாமியும், லட்சுமியின் தாயுமான கியாதியை வெட்டிக் கொன்றதும், மன்மதனை எரித்துக் கொன்றதுவும் கொலையல்லவோ? பிரம்மா சிவன் முடியைக் கண்டேனென்றுஞ் சொல்லி சாபமடைந்தது பொய் மொழியல்லவோ? பிரம்மாவிற்கும், சிவனுக்கும் ஐந்து தலைகளிருந்ததனால் பார்வதி அடையாளம் தெரியாமல் சோரம் போய்க்கொண்டிருந்தது விபசாரமல்லவோ? இக்காரணத்தால் பிரம்மாவின் தலையைச் சிவன் வெட்டினது கொலையல்லவோ? பிரம்மா தன் மகள் ஊர்வசியை இச்சித்து இருவரும் கலைமான் உருவெடுத்து மூன்று கேடாய் நடந்துகொண்டது மிருகப் புணர்ச்சியல்லவோ? விஷ்ணுவானவர் ஜலந்தராசுரனின் மனைவி பிருந்தையை அபகரித்து அவனை சம்மாரஞ் செய்ததும், தனக்கு யாதொரு தீங்குஞ்செய்யாத பத்மாசூரனை எரித்துக் கொன்றதும் கொலையல்லவோ? தனக்குப் பால் கொடுத்த பூதகியென்னும் தாயைக் கொன்றது கொலையல்லவோ? மாணிக்கவாசகர் குதிரை வாங்க வந்த பணத்தைச் சிவன் தனக்காகச் செலவிடச் செய்து நரியைப் பரியாக்கிச் சூதைப்புரிந்ததுவும்; சிவன் திருநீலகண்டநாயனாரிடம் கொடுத்த திருவோட்டைக் களவாடிமறுபடியும் கேட்டது களவல்லவோ? கோபிகாஸ்திரீகளினுடைய வஸ்திரங்களையும், அவர்கள்வீட்டு வெண்ணெயையும் கிருஷ்ணன் கவர்ந்துபோனது களவல்லவோ? மேலும் கணக்கற்ற மணம் முடிந்தக் கோபிகைகளைக் கூடியது ராட்சத புணர்ச்சியல்லவோ? சிவன் இராவணனின் மனைவி மண்டோதரியை இச்சித்து புணர்ந்ததும், அருந்ததியிடம் சென்று அவளை யிச்சித்து அம்மணமாகப் பிச்சையிடும்படி கேட்டு சிவன் சாபம்பெற்றுச் சிசுவானதும் காமமல்லவோ? விஷ்ணு மோகினி அவதாரங்கொண்டு வந்ததைச் சிவன் கண்டு காம வெறிகொண்டு விஷ்ணுவுடன் புணர்ந்தது ஆண் புணர்ச்சியல்லவோ? துரோணாச்சாரியின் மனைவியிடம் சிவன் விருந்துண்ணச் சென்றபோது அவள் மேல் மோகித்து இந்திரியம் ஸ்கலிதமாகும்படிச் செய்துகொண்டது புன்மைதனமல்லவோ? காசிபமானுடன் புணர்ந்து வள்ளியம்மையைப் பெற்றது மிருகப் புணர்ச்சியல்லவோ? சிவன் சுந்தரமூர்த்திக்காக பரவை நாச்சியாகிய வேசியிடம் தூது சென்று இருவரையும் சேர்த்து வைத்தது புன்மைதனமல்லவோ? சிவன் மாதங்கியோடு சொக்கட்டானாடி தோல்வியுற்றகாலத்தில் அவளைக் கிணற்றில் அமிழ்த்தியது கொடிய சூதல்லவோ? அன்றியும் பிரம்மா தன் புத்திரியையும், கிருஷ்ணன் குப்ஜையையும் இராதையையும், சிவன் இருஷிப் பத்தினிகளையும், இந்திரன் கவுதமர் மனைவியையும், சூரியன் குந்தியையும், சந்திரன் குருமனைவி தாரையையும், வாயு வானரத்தின் மனைவி கேசரியையும், வருணன் அகஸ்தியர் தாய் ஊர்வசியையும், பிரகஸ்பதி தன் சகோதரன் மனைவி உதத்தியாவையும், விஸ்வாமித்திரர் ஊர்வசியையும், பராசரர் மச்சகந்தியையும், வியாசர் வேலைக்காரியையும், பாண்டவர்கள் துரோபதையையும் புணர்ந்திருப்பது விபசாரமல்லவோ? இராமர் வாலியை வஞ்சனை செய்து கொன்றதுவும், பலதேவர் மதுவருந்தியதும், அறநூலுக்கு விரோதமல்லவோ? இவ்வனமே புராணங்களை துருவிக் காணுந்தோறும் தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமாகவே ஆரிய மத புரட்டர்களின் வயிறுபிழைக்கச் செய்த கடவுள்களின் யோக்கியதையைப் பின்பற்றினால் என்ன ஆத்திகத் தன்மை ஏற்படும் என்பதை யோசித்துப் பாருங்கள். அன்றியும், எண்ணித் தொலையா இப்பாழும் ஆண்சாமி, பெண்சாமி, பெண்டாட்டிசாமி, பிள்ளைச்சாமி, தகப்பன்சாமி, நுதலைச்சாமி, கல்லுச்சாமி, மண்ணுச்சாமி, கட்டைச்சாமி, செம்புச்சாமி, பொம்மைச்சாமி, பிட்டுச்சாமி, காட்டுச்சாமி, ஆற்றுச்சாமி, மயிலேறுஞ்சாமி, குயிலேறுஞ்சாமி, மாடேறுஞ்சாமி, ஆடேறுஞ்சாமி, எலியேறுஞ்சாமி, புலியேறுஞ்சாமி;

Best copy available.

## [illegible] தலைமையில் பாராட்டுக்கூட்டம்

★

வேலூர், ஜூன் 21-ந் தேதி வேலூர் வணிகம் மு. கெங்காத்ர முதலியார் குமாரன் தோழர் குப்புசாமிக்கும், முருகேச முதலியார் குமாரத்தி தோழர் சந்திரா பாய்க்கும் நேற்று முற்பகல் 10-மணிக்குத் தோழர்கள் மிராண்டா—கஜேந்திரன் முன்னிலையில் சிறப்பாக வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்கள் உறவினரான பெரியவர் ஒருவர் 'தாலி' எடுத்துக் கொடுக்க அதனை மணமகன் மணமகளுக்கு அணிவித்தார். பார்ப்பனப் புரோகிதமின்றி நடைபெற்ற இந்தத் திருமணத்தைக் காண பல பிரமுகஸ்தர்கள் வந்திருந்தனர்.

காங்கரஸ் கவுன்சிலர் தோழர் பி. கே. ரங்கசாமி முதலியார் தலைமையில் திருமணப் பாராட்டுக் கூட்டம் தொடங்கப்பெற்றது. பல தோழர்கள் மணமக்களுக்கு வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தார்கள். தலைவர் முன்னுரை முடிந்ததும் தோழர் எஸ். கஜேந்திரன் 'தமிழ் மணம்' எனும் பொருள் பற்றிப்பேசினார். அதன் சுருக்கம்:

"இந்தத் திருமணத்தின் வெற்றி பார்ப்பனன் இல்லாதது. ஆதலால் இதை சுயமரியாதைத் திருமணம் என அழைக்கிறோம். தன்தான் உயர்ந்த சாதி என ஆணவங்கொண்டு, நம்மைத் 'தொடாதே', 'கூட உட்கார்ந்து சாப்பிடாதே' என்று சொல்லும், ஒருவனை நம் முன்னர் மணையில் உட்கார வைத்து, அவனை 'குரு' என்றும், 'மகாத்மா' என்றும் சொல்லி, அவனுக்கு வணக்கம் செலுத்தி ஒரு சுப காரியம் நடத்தினால், தமிழர் அல்லது திராவிடர் என்று கூறிக்கொள்ளும் நம்மவருக்கு மானம் உண்டு, இனப் பற்று உண்டு என்று சொல்ல முடியுமா!

"ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் தேர்ந்தெடுக்கும் உரிமை இந்நாட்டில் பெரும்பாலும் இல்லை. குழந்தைகளுக்குத் திருமணம் செய்வது திருமணமாகாது! அது குழந்தைத் தம்பதிகளின் பெற்றோர்கள் கொண்டாடும் ஒரு வீட்டுப் பண்டிகையே யாகும்.

"இந்தத் திருமணத்தில் பார்ப்பனப் புரோகிதம் நீக்கப்பட்டுவிட்டாலும், 'தாலியணிவித்தல்' என்ற சடங்கு நடைபெற்றது. எனக்கோ, அல்லது நான் கலந்து தொண்டாற்றிவரும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களுக்கோ, இந்தச் சடங்கு ஒருபோதும் பிடிக்காது. தாலி அணிவித்தலால் விஞ்ஞான ரீதியில் மணமக்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படும் என்பது பெறப்படுமானால், அந்த நிலையில் பெண்ணுக்கு ஒரு தாலி அணிவிப்பது போலவே, ஆணுக்கும் ஒரு தாலி அணிவிக்கவேண்டும் அதுதான் முறை. அப்போதுதான் ஆண் பெண் சமத்துவம் என்பதற்குப் பொருளுண்டு.

"இப்பொழுது இங்கு வாசித்தளிக்கப்பட்ட வாழ்த்துப் பத்திரம் ஒன்றில், 'மணமக்காள்!, இல்லற வாழ்க்கையில் வள்ளுவர் வகுத்த வாசகமதை யேற்று நல்லறம் நடாத்தி எல்லைத் துன்பத்தினின்றும்......' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

தெய்வந் தொழாஅள்
கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை

என்று வள்ளுவர் 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தில் கூறியிருப்பதைக் கருத்தில் வைத்துத்தான் இவ்வாறு எழுதியிருக்கிறார்களென்று கருதுகிறேன்.

"உள்ளபடியே வள்ளுவரிடத்தில் எனக்கு நிரம்ப மதிப்பும், பக்தியும் உண்டு. அவர் இயற்றிய குறளை நான் என் உள்ளம் உருகப் படித்தின்புறுவதுண்டு. ஆனாலும் அவனைத் தொழுதெழும் பெண் சொன்னதெல்லாம் சித்திக்கும் என்று சொன்னவர், பெண்ணைத் தொழுதெழும் ஆண் சொன்னதெல்லாம் அல்லது நினைத்ததெல்லாம் சித்திக்கும் என்று கற்பனை [illegible] சொன்னார் என்பதற்காக நீங்கள் கண்மூடி மௌனிகளாகப் பின்பற்றாமல், உங்களுக்குச் சரி என்று பட்டதை, நீங்கள் இருவருமே மனப்பூர்வமுடன் ஆலோசித்து ஒத்துழைப்புடனும், பூரண காதலுடனும் நீண்டகாலம் வாழவேண்டுமென்று விரும்புகிறேன்." (கைதட்டல்)

பின்னர் சென்னை என். வி. நடராஜன் பெரியார் கால்நூற்றாண்டு காலமாக மக்கள் நலனுக்கு உழைத்துவரும் பெற்றியினை விளக்கி 'சீர்திருத்தம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தோழர் மிராண்டா கஜேந்திரன் மணமக்களை வாழ்த்துமுகத்தான் 'கற்பு' எனும் பொருள்பற்றிப் பேசியதாவது:

"சாதாரணமாக பெண்ணை மட்டும்தான் கற்புடையவராக இருக்கிறாரா, இல்லையா என்பதை மக்கள் கவனிக்கின்றனர். ஆண்கள் கற்புடையவர்களாய் இருக்கிறார்களா என்பதைப்பற்றி மக்கட்குக் கவலையேயில்லை.

"ஒரு பெண் சிறிதளவு ஒழுக்கத்தினின்று வேறுபட்டுவிட்டாலும், உடனே அவளை சாதியினின்று தள்ளி விடுகிறார்கள். அவளைக் கண்டபடி மக்கள் ஏசுகிறார்கள். ஆனால், ஒரு ஆண் அதே முறையில் கெட்டவழியில் அலைந்து திரிந்தாலும், அதைப் பற்றிக் கேவலமாக ஒன்றும் சொல்லுவதில்லை. அவருக்கு மட்டும் எப்போதும் நடக்கும் மரியாதைகள் நடந்துகொண்டுவரும். இப்படி வித்தியாசம் ஒழிக்கப்பட்டு, ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான தீர்ப்பு வழங்கவேண்டும்.

"ஆணுக்கும், பெண்ணுக்கும் சமநிலை ஏற்பட்டால்தான் கற்பு என்ற வார்த்தைக்குப் பொருளுண்டு, என்று சொல்லிக்கொண்டு மணமக்கள் திடகாத்திரத்துடன் வாழவேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்."

தோழர் சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றியபின்னர், தோழர் சாமி நன்றிகூற விழா இனிது முடிவுற்றது. ([illegible])

மாயி, குழந்தையாயி, அங்கம்மன், அங்காளம்மன், மூக்கம்மன், முத்தாளம்மன், பொம்மியம்மன், வெள்ளையம்மன், ஜக்கம்மன், தீப்பம்மன், தீப்பாஞ்சியம்மன், சாமுண்டியம்மன், சாவேரியம்மன், வள்ளியம்மன், தெய்வானை, காமாக்ஷி, விசாலாக்ஷி, பேச்சியாயி, லட்சுமி, ஆண்டாள் முதலிய அம்மார்களும், சிவன், நாராயணன், பிரமன், முருகன், விநாயகன், ஐயனார், ஆஞ்சநேயர், காட்டான், மாடன், காட்டேரி, கருப்பண்ணன், முனீஸ்வரன், இருளன், பேயாண்டி, பெரியண்ணன், சின்னண்ணன், காத்தவராயன், மதுரைவீரன், வீரியன், நொண்டி, ஆரி, ஆண்டி, நல்லண்ணன், தொட்டியத்து சின்னான், மன்னாரு, பனைமரத்தான், நாட்ராயன் முதலிய அய்யமார்களும் நமது நாட்டைவிட்டு என்று தொலைவார்களோ அன்றே நமது நாடு விடுதலையடையும். நிச்சயம்! நிச்சயம்!!

வீட்டைக் கொளுத்திப் பூட்டைத் திறப்பதாய்,
உப்பைக் காய்ச்சி உரிமை பெறுவதாய்,
உபவா சத்தால் உலகை வெல்வதாய்,
கதரை யுடுத்திக் கவலை தீர்ப்பதாய்,
சிறையிற் கிடந்து சேவை செய்வதாய்,
பறைசாற் றிடுமோர் பனியா வாகிய
காட்டு மிராண்டிக் காந்தியின் கும்பலில்
மானங் கெட்டுச் சொரணை யற்ற
தமிழன் ஒருவன் சுற்று கின்றான்:
தன்மதிப் பியக்கம் தவறி விட்டதாம்
அறிவியல் துறையிலே வடவனின் அடிமைநீ!
அந்தாரத் மாவின் சுந்தரத் தோழனே,
காந்தியக் கப்பல் கவிழ்ந்திடும் நாள் இதோ!
எங்கணும் எதிர்ப்பு, எழுந்துபார் உலகை.
உங்களின் ஜம்பம் ஓங்குமோ இனிமேல்?
உணர்ந்தனர் தமிழர், உறக்கம் விடுத்தனர்.
தயக்கமில் லாது தன்மதிப் போங்கிட
இயக்கம் வளர்ந்தது; இதனைநீ அறியாய்!
புரட்சி மனத்தில் பொங்கி வழிந்திட,
திரட்சித் தோட்கள் தினவொடு துடிக்க,
ஆயி ரம்பதி னாயிரம் வீரர்,
இளைஞர், மாணவர் எழுச்சி பெற்றனர்.
கனவே! கண்விழி! கால நிலையுணர்!
மலையுடன் மோதினால் மண்டைதான் சிதறும்;
மலையுடை யாது. மனிதனென் றாலறி!
எதிரிகள் மோத இயக்க வளர்ச்சி
அதிகரித் துள்ளது ஆயிரம் மடங்காய்.
இதனால் எத்தனை எரிச்சல், கோபம்!
ஆத்திரம் வந்தால் அலறச் சொல்லுமோ?
பொறாமை நிறைந்தால் பிதற்றச் சொல்லுமோ?
அறிவுக் கண்ணைத் திறந்து
அமைதியாய் நோக்கி அடங்கிடு தோழனே!

## திருமணங்கள்

23-5-45-ம் தேதி அலிவலம் தோழர் வடிவேல் அவர்கள் இல்லத்தில் திருவாரூர் தோழர் எம். ஏ. ஆறுமுக நாடார் அவர்கள் தலைமையில் தோழர்கள் வடிவேல்-இந்திராணி; செல்லமணன்-சந்திர பார்வதி முதலியவர்கள் வாழ்க்கை ஒப்பந்தம் இனிது நிறைவேறியது.

தோழர்கள் இராமசாமி நாடார்' ரெங்கராஜு, தியாகராஜன், கிருஷ்ணசாமி, மணி, வெட்சப்பா, அன்பழகன் பி. ஏ., முதலியவர்கள் மணமக்களைப் பாராட்டியும் ஆரிய ஆபாசங்களை விளக்கியும் பேசினார்கள். மணமக்களுக்கு வெள்ளிச் சாமான்கள் ஏராளமாகப் பரிசளிக்கப்பட்டன. சிதம்பரம் தோழர் சம்பந்தம் பார்ட்டியின் தமிழ் இன்னிசைக் கச்சேரி சிறப்பாக நடந்தது. இத்திருமணத்தின் நினைவாக 'குடி அரசு', 'திராவிடநாடு' முதலியவைகளுக்கு முறையே ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

27-5-45-ல் கல்லுராணி தோழர் பெ. சக்குமோக நாடார் மகன் ராமனாதனுக்கும், காலஞ்சென்ற தோழர் முத்தையா நாடார் மகள் பாக்கியம்மாளுக்கும், கல்லுராணி தோழர் கே. ஏ. புன்னைமூர்த்தி தலைமையில் மணமகள் இல்லத்தில் சீர்திருத்த திருமணம் விமரிசையாக நடைபெற்றது. இதன் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

1-6-45 தேதி பாலகிருஷ்ணம்பட்டியில் திருச்சி ஆதித்தமிழ் மாணவர் விடுதி உதவி காரியதரிசி தோழர் அப்பாராஜுக்கும் பாக்கியத்தம்மாளுக்கும் சீர்திருத்த திருமணம் நடைபெற்றது. தோழர் எ. ராஜா அவர்கள் சீர்திருத்தத்திருமணத்தின் அவசியம் என்பதுபற்றிப் பேசினார். இத்திருமணத்தின் நினைவாக 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

7-6-45-ல் தன்னீரம்பாடியில் சீர்திருத்தத் திருமணம் தோழர்கள் எல். பூசம்மாள் பி. சுப்பையன் இருவருக்கும், தோழர் மூவலூர் இராமாமிர்தத் தம்மாள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மனோகரன், புலவர் வீ. குழந்தையார், புலவர் கா. அ. மணியம் திருமணத்தைப் பற்றிப் பேசினார்கள். 'குடி அரசு'க்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* *

31-5-45-ல் திருச்சி உறையூர் வைத்தியலிங்கம் பண்டிதர் புதல்வர் சந்தனத்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

## கடலூர் N. T. திராவிடர் இளைஞர் கழகம்

18-6-45 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு முத்தையா ஹாலில் திராவிட இளைஞர் கழக ஆண்டு விழா நடைபெற்றது. மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்து இயக்கத் தோழர்கள் பலர் வந்திருந்தனர். தோழர் அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தலைமை வகித்தார். தோழர் முரசழகன் யாவரையும் வரவேற்றார். தோழர் எஸ். எம். தண்டபாணி கழக ஆண்டு அறிக்கையைப் படித்தார்.

பெரியார் சுமார் 2-மணி நேரம் திராவிடரியக்கத்திற்கு திராவிடர் கழகம் எனப்பெயர் குறிக்கப்பட்ட காரணங்களையும், திராவிட இளைஞர்களின் கடமையையும் விளக்கி உணர்ச்சியூட்டும் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார்கள். பெரியார் பேருரைக்குப் பின்;

திராவிட மக்களின் விடுதலை இயக்கம் அரசியலின்றும் சமுதாய இயலைப்பிரித்து வேலை செய்வது இயலாதென்றும், தோருகிற பலனை அளிக்காது என்றும் திட்டமாகக் கருதுவதோடு திராவிட மக்கள் யாவரும் திராவிடநாட்டுப் பிரிவினைப் போராட்டத்தை வலுப்படுத்த வேண்டுமென்றும்; தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் தம் தாய்மொழிப் பாடத்தைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்றும், எஸ். ஐ. எல். எப். (தெ. இ. ந. உ. சங்கம்) பெயரால் அண்மையில் ஒரு சில பட்டம்பதவியாளர்களால் சென்னையில் கூட்டப்பட்ட மாநாடு முறையற்றதென்றும் சேலத்தில் நடைபெற்ற மாநாடே முறையானதென்றும் அரசாங்கத்தார் சென்னை மாநாட்டாரைப் பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்ளல் முறையாகாது என்றும், பெருமை மிக்க வேவல் [illegible] திட்டம் வேடிக்கையாயிருக்கிறதென்றும், அது திராவிட மக்களின் வேண்டுகோளை புறக்கணிப்பதென்றும், காங்கிரஸ், லீக் ஆகியோரின் உரத்த குரலுக்குப் பணிவதென்றும், இவ்விடைக்காலத் திட்டம் மிகப் பிற்போக்கானதென்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ஆ. திராவிடமணி பி. ஏ., கொட்டகை கொடுத்துதவிய தோழர் இராமசாமிப் படையாட்சி அவர்களுக்கும் பிறருக்கும் நன்றி கூறியதும் கழக ஆண்டுவிழா இனிது முடிவுற்றது.

### பிற்பகல் நிகழ்ச்சிகள்

திருப்பாதிரிப் புலியூர் பேட்டை செட்டித்தெருவிலுள்ள திராவிட இளைஞர் கழக உறுப்பினர் தோழர் துரைராசன் அவர்களின் இரு குழந்தைகளுக்கு பெரியார் அவர்களால் தமிழரசன், திராவிடக் கண்ணு என்று பெயர் வைக்கப்பட்டது.

மாலை 6-30 மணிக்கு மஞ்சகுப்பம் மைதானத்தில் தோழர் மா. பீட்டர் பி. ஏ. தலைமையில் நடைபெற்ற மிகப்பெரிய பொதுக் கூட்டத்தில் பெரியார் அவர்களும் அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களும் அரிய சொற்பொழிவாற்றினார்கள். பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்ற வாழ்த்தொலிகளுக்கிடையே எஸ். எம். தண்டபாணி நன்றி கூற இரவு 10-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

அழகிய முதல்தரமான வெளியீடு:

**புரட்சிக் கவிஞர்**

அவர்களது அழகு அமைந்த படம் பல கலரிலும், உயர்ந்த வேலைப்பாடுகளுடனும், இதுவரை வெளிவராத முறையில் கவிஞர் கையெழுத்துடன் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0-2-0. மாதிரி வேண்டுவோர் 0-2-9 தபால் பில்லைகள் அனுப்பித்தருக!

N. B: சென்றவாரம் வெளிவந்த நமது விளம்பரத்தில் கவி அவர்களுடைய படம் விலை 0-1-0 என்பதை 0-2-0 அணா என்று தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

திராவிடன் பதிப்பகம், 133 லாங்குபசார், வேலூர். (N. A.)

## வ. ஆ. ஜில்லா திராவிடர் கழக மகாநாடு

இம்மாநாடு ஜூலை மாதம் இறுதியில், ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி சினிமா கொட்டகையில் நடைபெறுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## சென்னை ஜில்லா சுயமரியாதைச் சங்கம்

### நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

சென்னை ஜில்லா, சுயமரியாதைச் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 19-6-45 மாலை 6¾ மணிக்கு சென்னை பார்க் டவுன் பொன்னுசெட்டித் தெரு 11-ம் நெ. இல்லத்தில் தோழர் கே. எம். பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் கூடியது. நகரத்தின் பல பாகங்களிலிருந்தும் 60-க்கு மேற்பட்ட நிர்வாக உறுப்பினர்கள் வந்திருந்தனர். அதுசமயம் சென்னை ஜில்லா சுயமரியாதை மாநாட்டையும், சிவாஜி நாடகத்தையும் வருகிற ஜூலை மாதக் கடைசியிலாவது, ஆகஸ்டு முதல் வாரத்திலாவது நடத்தவேண்டுமென்றும், தேதியும் வரவேற்புக் கமிட்டி தேர்ந்தெடுப்பும் அடுத்த கூட்டத்தில் முடிவு செய்வதென்றும், சமீபத்தில் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடந்த மகாநாட்டில் தலைமை வகித்த சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தம்மை சுயமரியாதை மாகாணச் சங்கத் தலைவரென்று சொல்லிக் கொண்டும் 'நான் இந்து மதக்காரன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்' என்று கூறியிருப்பது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைக்கும் நோக்கங்களுக்கும் முரண்பட்டிருப்பதால் அவருடைய இச்செய்கையை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதுடன், மாகாண முழுமையுமுள்ள சுயமரியாதைச் சங்கங்கள் அவருடைய செய்கையைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## பள்ளர் மாநாடு

சேலம் ஜில்லா பள்ளர்கள் மாநாடு, நாமக்கல் தாலுகா பெளத்திரம் கிராமத்தில் 1945-ம் வருஷம் ஜூலை மாதம் ஆரம்பத்தில் நடைபெறும்.

# N. S. K. யும் பாகவதரும்

ஆசிரியர்,
"குடி அரசு" ஈரோடு.

தோழர் எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களைப் பற்றியோ, தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களையோ தமிழ்நாட்டாருக்கு அறிமுகப்படுத்தல் வேண்டிய அவசியமில்லை. ஆயுள் தண்டனையடைந்து அவ்விருவரும் சிறைச்சாலையில் பரிதவித்துக் கொண்டுள்ளார்கள். காலஞ்சென்ற தோழர் லக்ஷ்மிகாந்தம் எழுதிய கட்டுரைகளின் தாரதம்யங்களைப் பற்றியோ குற்றச்சாட்டுகளில் பாகவதர், கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட சம்பந்தா சம்பந்தங்களின் உண்மை, பொய்மை இவைகள் பற்றியோ எனக்குத் தெரியாது. இவற்றை ஆராயும் துறையிலும் ஈடுபட நான் விரும்பவில்லை. அது என் நோக்கமுமல்ல. சங்கீத உலகிலாகட்டும், திரை உலகிலாகட்டும், பாகவதர், கிருஷ்ணன் இருவரும் இரு விலைமதிக்கவொண்ணாத மாணிக்கங்கள். கருவிலிருக்கும் சிசு முதல், சாகும் கிழவர் வரை பாகவதர் பாடிய பாட்டைப் பாடிப் பாடி பரவசமடைகின்றனர். பாரதியார், பாரதிதாசன், முத்துத்தாண்டவர் முதலிய கவிஞர் அரும்பெரும் பாக்களை தந்தருளினும், பாமர மக்களும் எளிதில் பொருள் புரிந்து தாங்களும் பாடும் வண்ணம் பாடிய தனிப்பெருமை பாகவதருக்கே உண்டு. தோழர் கிருஷ்ணன் இல்லாத ஹாஸ்யம் ஒரு ஹாஸ்யமல்ல. இவர்கள் இருவரும் இல்லாத நாடகமோ, ஹாஸ்யமோ, ஆங்கிலத்தில் "Staging Hamlet without the Prince of Denmark," என்று சொல்லுவதைப் போலொத்ததுதான். இனி அவர்கள் 'வாழ்வதா, வீழ்வதா' என்பதுதான் கடமையாகச் சிந்திக்கப்படவேண்டிய விஷயம். அஷ்டி, ஷிமூர், குலசேகரப்பட்டினம் கைதிகளுக்காக சில தலைவர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளார்கள். அதேபோல் நம் நாட்டு மக்களின் கருணைக்கு தோழர்கள் பாகவதர், கிருஷ்ணனும் பாத்திரமானவர்கள். உதயம் முதல் அந்திப்பொழுதுவரை உழைப்புமுதிய பாடுபட்டு, களித்த உள்ளத்தால், குடிசைகளிலே குற்றுயிராய்க்கிடக்கும் நம்நாட்டு மக்களைச் சிறிதுநேரமாகிலும், தன் மதுரகானத்தால் மகிழ்வித்தார் பாகவதர்; தன் ஒப்பற்ற ஹாஸ்யத்தால் சிரிக்கவைத்தார் கிருஷ்ணன். உயர்ந்த இசை, நடிப்பு இவைமூலம் மகத்தான சிறப்பைத் தந்த பாகவதர், கிருஷ்ணன் இவர்கள் நம் பண்டைக் கலைகட்கு இணையற்ற இரு ரத்தினம் போன்றவர்கள் இன்று சிறைச்சாலையில் ஏக்கமுற்றுவதங்கிக்கிடக்கின்றனர். ஈடு இணையற்ற இவ்விரு ரத்தினங்களை இழந்து விடுவது, ரசனையும், மகிழ்ச்சியும் நிறைந்த கலை வாழ்வை மண்ணுக்கு இரையாக்குவதாகும்.

யுத்தத்தில் முன்னணியில் நின்றவர்கள் இவ்விருவர்தான் என்று கூறின் அது மிகையாகாது. யுத்த நிதிக்காக, பாகவதரும், கிருஷ்ணனும் நாடகங்கள் மூலமாக நிதிக் குவியல்கள் திரட்டியும், தாங்களாக உதவியருளியும் உள்ளார்கள். தோழர் கிருஷ்ணன் அவர்கள் ரூ. 10 லட்சம் வரை கொடுத்து உதவியுள்ளதை சென்ற 'குடி அரசு' வாயிலாக வெளிவந்ததை ஞாபக மூட்ட விரும்புகிறேன். இனி உயர்நீதி மன்றத்தில் அவர்கள் வழக்கு விசாரிக்கப்படலாம். இந்நாட்டிலுள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், பொது மக்களும் கட்சிகளுக்கும் புறம்பான பாகவதர், கிருஷ்ணனை மீண்டும் நம் முன் தோன்றும்படி முயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

C. R திருநாவுக்கரசு,
கோயமுத்தூர், 19-6-45.

## ராமமடத்தில் ராமபக்தி

பட்டுக்கோட்டை ராமமடத்தில் ஸ்ரீ ராமநவமி உற்சவம் நடந்தபோது பார்ப்பனர்களின் மத உணர்ச்சி தடைபட்டதாகவும், பூஜை ஆராதனை நடைபெறாது செய்ததாகவும், 10 பார்ப்பன வக்கீல்களும் 5 சாஸ்திரிகளும் சேர்ந்து கொடுத்த பிராது 18-6-45-ல் விசாரணை நடந்தது. 28-6-45-ல் மாற்றப்பட்டிருக்கிறது. இவ்வழக்கில் தோழர் டி. பி. வேதாசலம் ஆஜர் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பூந்தோட்டத்தில் பொதுக்கூட்டம்

30-6-45 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பூந்தோட்டம் கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

திராவிடர் தனிப்பெரும் தலைவர் பெரியார் ஈ. வெ. ராமசாமி, தளபதி தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., இவர்கள் பேசுவார்கள்.

ஒலிபெருக்கி அமைக்கப்படும்.

ஜப்பானியரை ஒழிக்க!
ரேடியோ செய்திப்படி, நேசப்படைகள்,
நாளொன்றுக்கு ஒரு டிவிஷன் வீதம்
மேற்கிலிருந்து கிழக்குநோக்கி வந்துகொண்டிருக்கிறது.
★
இனி
துருப்புகளின் சௌகரியங்களுக்குத் தேவை எவ்வளவு
அதிகரிக்கிறது என்பதைச்சற்று கவனிப்பீர்களாக!
ஆகவே
"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"
என்ற தலைப்பில்
மே. த. கவர்னர்
யுத்த நிதிக்கு
தயவுசெய்து பணம் கொடுத்துதவுங்கள்.

குடி அரசு

1945-ஞு ஜூன்மீ 23உ

## மாநாடுகள்

சேலம் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி அதாவது 6 மாத காலத்திற்குள் ஜில்லா ஒன்றுக்கு 1000, 1000 மெம்பர்களும் ஜில்லா தாலூகாக்கள் தோறும் கிளை ஸ்தாபனங்களும் ஏற்பட்டவுடன் ஸ்பெஷல் (தனி) மாநாடுகூட்டி ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கவேண்டும்

என்பதுஆக தீர்மானித்தபடி இப்போது 33000 மெம்பர்களும் சுமார் 200 கிளை ஸ்தாபனங்கள் ஜில்லா தாலூகாக்களிலும் சில முக்கிய கிராமங்களிலும் ஏற்பட்ட பிறகும் ஏன் இனியும் மாநாடு கூட்டவில்லை என்பதாக திராவிட மக்களால் பெரிதும் கேள்க்கப்படுகின்றது.

அதுபோலவே, சென்ற வருஷம் திருச்சி டவுன்ஹால் மண்டபத்தில் கூடிய சுயமரியாதை இயக்க அன்பர்கள் கூட்டத்தில் திருச்சியில் அல்லது கோவையில் சுயமரியாதை மாநாடு கூட்டப்பட வேண்டும் என்று தீர்மானித்தபடி ஏன் கூட்டப்படவில்லை என்றும் பல தோழர்களால் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

இவ்விரு மாநாடுகளும் கூட்டும் விஷயம் தலைவரின் கவனத்தில் இல்லாமல் போகவில்லை என்பது நமக்குத் தெரியும். சேலம் மாநாட்டுக்குப்பின் நடந்த பல சம்பவங்களாலும், அரசியல் நிலையில் இருந்துவருகிற சில பிரச்சினைகளாலும் அவை ஏதாவது ஒரு முடிவுக்கு வந்தவுடன் ஸ்பெஷல் மாநாடுகூட்டி சேலம் மாநாட்டு அதாவது பட்டம் பதவி விடும் தீர்மானங்களை அமுலுக்கு அனுமதிப்பதுடன் அத்துடனேயே சுயமரியாதை மாநாட்டையும் நடத்தி ஏதாவது ஒரு முக்கிய பிரச்சினையின் மீது பெரியதொரு கிளர்ச்சி துவக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காலம்குறிக்க காத்திருக்கவேண்டி வந்தது. ஒரு காரியம் விளங்கிவிட்டது. என்னவெனில் சேலம் மாநாட்டுத் தீர்மானங்கள் அமுலுக்கு வந்தால் யார் யார் தாக்குப்பிடிக்க முடியாமல் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்து விலக்கப்பட வேண்டியவர்களாகவும் வெளியில் போய் விடவேண்டியவர்களாகவுமாவார்களோ அதாவது பட்டம் பதவியாளர்களும், அந்த ஆவலையாளர்களும், தேர்தலின் வெற்றிபெறுவதன்மூலம் பிரமுகர்கள் மந்திரிகள் முதலிய பெரியவர்களாக வேண்டியவர்களும், கட்சித்தொண்டு என்னும் பேரால் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்களும், தாங்கள் ஒரு சிறிதும் கட்சிக்கு தொண்டாற்றாமல், உதவாமல் ஊரார் உழைப்பையும், உதவியையும் பயன்படுத்தி சுகசும் அனுபவிக்கக் கருதியவர்களும் பெரிதும் கட்சியின் ஏற்சம்பலமாய் தாங்களாகவே விலகிவிட்டார்கள்.

இது நல்ல வாய்ப்பாகவே கட்சிக்கு நலம்ஏற்பட்டுவிட்டதால் சேலம் தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்குமாத்திரம் என்பதாக நாம் அவசரப்பட்டு மாநாடு கூட்டப்பட வேண்டும் என்பது இல்லாமல் நமது பிரசாரத்தாலும் கிளர்ச்சி துவக்குவதற்குமாக சேர்ந்து சீக்கிரம் மாநாடு கூட்டவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அப்படிச்செய்வதில் சடுதியில் நாடு ஒரு மாற்றமடைய நேரிடலாம் என்கின்றதான அரசியல் நிலை மாறுதலையும் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இதுவரை வெறும் பேச்சாகவும் கற்பனை கட்டுப்பாடாகவும் இருந்த அரசியல் சேதி இன்று வேவல் திட்டத்தால் காரிய உருவை அடைந்து அதற்கு உயிர் ஏற்படும் யோசனைத்தன்மையில் இருக்கிறது. அதன் முடிவையும் அதனால் ஏற்படக்கூடிய மாகாண நிலைமையையும் சற்று பொறுத்துப் பார்த்து நாம் ஏதாவது முடிவு செய்வது மேலும் நலமும் தெளிவும் தரக்கூடியதாக இருக்குமாதலால் இப்போது அதை எதிர்பார்த்துப் பொறுத்திருப்பதால் காலக்கேடு ஒன்றும் பிரமாதமாக ஏற்பட்டு விடாதென்றே கருதுகிறோம்.

வேவல் திட்ட விளைவும் மாகாண மாறுதல் அமைப்பும் நமக்கு அனுகூலமாய் இருந்தாலும் (இருக்கவே மாட்டாது) பிரதிகூலமாய் இருந்தாலும் அது நம் அதாவது திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) வேலையை வெற்றிக்கு பக்கமாக நடத்திச்செல்ல உறுதியும் உற்சாகமும் அளித்து ஊக்குவிக்க பெருந்துணையாய் இருக்குமே ஒழிய மற்றபடி அதனால் தளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டுவிடாதென்றே கருதுகிறோம்.

அதுபோலவே சுயமரியாதை மாநாடும் அதே சமயத்தில் வைத்துக்கொள்ளுவதும் ஒன்றுக்கொன்று உறுதுணையாய் இருக்குமே தவிர காரியம் ஒன்றும் தவக்கப்பட்டோ கெட்டோ போய்விடாதென்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால் வேறு சிலர் சு. ம. மாநாடு கூட்டப் போவதாக அறிக்கைகள் விட்டிருப்பதால் "நாம் சீக்கிரத்தில் கூட்டிவிடவேண்டும்" என்பதாகப் பலர் அவசரப்படுகிறார்கள், எழுதுகிறார்கள். வேறு யாராவது கூட்டினால்தான் நமக்கு நட்டமென்ன? வேறு சிலர் கூட்டிய "ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டால்" நமக்கு ஏற்பட்ட கெடுதி என்ன? குற்றமென்ன? என்று பார்த்தால் இந்த அவசரம் அசட்டுத்தனம் என்பது விளங்கும்.

என்றாலும் இவ்வாரம் திருச்சிமாவட்டத் திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டின் போதும் சென்ற வருஷம்போலவே டவுன்ஹால் மண்டபத்தில் சுமார் 700 சுயமரியாதை இயக்க அன்பர்கள் தோழர் வேதாசலம் அவர்கள் அழைப்புக்குக்கூடி 1மணி நேரம் பேசி சு. ம. மாநாடு உடனே திருச்சியில் கூட்டுவது என்று பிரேரேபிக்க ஆரம்பித்தார்கள் என்றாலும் பெரியார் எழுந்து மாநாட்டைக் கூட்டுவதில் தனக்கு ஆட்சேபனை இல்லை என்றும், ஜில்லாக்கள்தோறும் உள்ள ஸ்தாபனங்களை புதுப்பித்து அங்கத்தினர்களை கூடுமானவரை சேர்த்து இரண்டுமாநாடும் ஒன்றாக நடத்தலாம் என்று தெரிவித்துக்கொண்டதின் பேரில் அத்தப்படியே

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

16ந்தேதி ஈரோடு விட்டு சென்ற பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திருச்சி, கடலூர், மாயவரம், நன்னிலம், ஆலங்குடி, திருவாரூர், கரூர் ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டு 23ந்தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார்.

திரும்புகையில் வழியபடி வயிற்றுக் கோளாரும், ஏப்பமும், மயக்கமும், அஜீரணத்தொல்லையும் ஏற்பட்டு விட்டதால் இவ்வார சுற்றுப் பிரயாணம் 'கேன்சில்' செய்யப் பட்டு விட்டது.

30ந்தேதி சிதம்பரம் அடுத்த பூந்தோட்டத்திற்குச் சென்று உடல் நலம் சரியாய் இருந்தால் தொடர்ந்து ஒருவாரம் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு சென்னை செல்லுவார்.

இம்மாதம் 28ந்தேதி திருவத்திபுரம் செல்லுவது உறுதி இல்லை. சௌகரியப்பட்டு டாக்டர் அனுமதி கிடைத்தால் செல்லக்கூடும்.

---

தீர்மானிக்கப் பட்டிருக்கிறது: ஆகையால் தோழர்கள் மகாநாடுகள் கூட்டப்படவில்லையே என்பதாக ஏங்கப்படாமலும் அதுவே ஒரு பெரிய குற்றமென்று சொல்லிக் கொண்டிருக்காமலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் பிரசாரம் கூறு சுறுப்பாக நடக்க உதவிசெய்ய வேண்டுகிறோம். மாநாடுகள் நடத்த சகல வசதிகளும் உள்ள தோழர்கள் இடத்தையும் காலத்தையும் தெரிவித்தாலும் உடனே கவனிக்கப்படும். ஆதலால் மாநாடு கூட்ட யாருக்கும் ஆசையில்லாமல்போகவில்லை என்பதையும் வேறு யார் கூட்டினாலும் உண்மை மாநாடு எது? போலி மாநாடு எது? கூட்டுகிறவர்கள் கருத்து என்ன? அவர்களது அன்பர்கள் யார்? அவர்களில் எத்தனைபேர் கிளர்ச்சியில் கலருவார்கள்? அவற்றின் பலன் என்ன? என்பதை அறியமுடியாத மக்கள் திராவிடரில் இன்னுமா இருக்கமுடியும்?, என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 23-6-45ந்தேதி வரை 33074 அங்கத்தினர்கள் ரூ. 3279—8—0 சந்தா

ஜூன் மாதம் 23-ந் தேதி வரை திராவிட கழகத்திற்(ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ஜில்லாவின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வருவான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5906 | 9. சென்னை | 1763 |
| 2. தஞ்சை | 5901 | 10. மதுரை | 1456 |
| 3. சேலம் | 4554 | 11. செங்கல்பட்டு | 882 |
| 4. திருச்சி | 3951 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 216 |
| 5. இராமநாதபுரம் | 2293 | 13. நெல்லூர் | 169 |
| 6. திருநெல்வேலி | 2125 | 14. புதுக்கோட்டை | 95 |
| 7. தென் ஆற்காடு | 1919 | | |
| 8. வட ஆற்காடு | 1844 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 33074. சந்தா ரூ. 3279 8-0.

---

## சு. ம. கூட்டம்

திருச்சி டவுன்ஹால் மண்டபத்தில் 17-6-45ந்தேதி இரவு 9-30க்கு கூடிய சுயமரியாதை இயக்க அன்பர்கள் சுமார் 700 பேர்களுக்கு மேல் கூடிய கூட்டத்தில் தோழர்கள் டி. பி. வேதாசலம், சி. என். அண்ணாதுரை அவர்களால் கூட்டத்தின் கருத்தை விளக்கிச் சொல்லப்பட்டதோடு தோழர் வேதாசலம் அவர்களால் திராவிடநாட்டு சுயமரியாதை (மாகாண) மாநாடு கூட்டப்படவேண்டும் என்றும் அதை திருச்சியில் கூட அனுமதி தரவேண்டுமென்றும் கொண்டு வரப்பட்ட பிரேரபணைமீது பெரியார் ஈ. வெ. ரா. எழுந்து மாநாடு திருச்சியில் கூட்டுவதில் ஆக்ஷேபனை இல்லை என்றும் எல்லா ஜில்லாக்களிலும் அங்கத்தினர்கள் சேர்த்து அதாபனங்களை புதுப்பித்துவிட்டு உடனே நடத்தலாம் என்றும் அப்பொழுதுதான் எதாவது கிளர்ச்சி நடத்த முடியுமென்றும் கேட்டுக் கொண்டதின்மீது அதை தோழர் வேதாசலம் அவர்கள் ஒப்புக்கொண்டதால் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் ஆதரித்ததால் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு பிரமுகர் முன்னின்று இக்காரியம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

## மகிழ்ச்சிக்குறிய சேதி

கானாடுகாத்தான் தோழர் வை. சு. ஷண்முகம் அவர்களின் மகள் பார்வதிதேவி அம்மையும் அவரது துணைவர் தோழர் நடராஜன் அவர்களும் பின்னவர் பர்மாநாடு கம்பெனியில் செட்டியார் காலேஜில் பிரின்ஸ்பால் உத்தியோகம் ஏற்றுக்கொண்டு சுகமாக இருக்கிறார்கள் என்று 17-6-45ந்தேதி பர்மாவிலிருந்து தோழர் வை. சு. அவர்களுக்கு சேதி கிடைத்திருக்கிறது. இது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

## திருமணங்கள்

மதுரை தோழர் ம. ஆறுமுகசாமி மைத்துனர் கிருட்டிணனுக்கும் தங்கலட்சுமிக்கும் 27-6-45-தேதி அருப்புக்கோட்டையில் திருமணம் நடைபெறும்.

திருச்சி, தோழர் கே. என். வாசவன் அவர்கள் மகள் ரெத்தினசாமிக்கும் மங்கயர்கரசவுக்கும் சேறன்குளம் மணமகன் இல்லத்தில் 27-6-45 தேதி புரோகிதம் ஒழித்த திருந்திய திருமணம் நடைபெறும்.

## திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாடு

திருச்சிஜில்லா 16வது திராவிடர் கழக மாநாடு 17-6-45ஆம் தேதி திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் நடைபெற்றது. உள்ளூர் வெளியூர்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். மாநாட்டுக் காரியதரிசி தோழர் டி. பி. வேதாச்சலம் அவர்கள் கேட்டுக்கொள்ள சென்னை தோழர் சத்தியவாணி முத்து அம்மையார் திராவிடர்களின் தற்கால அரசியல் நிலைமை விளக்கி கொடியேற்றுவித்தார். "தொழிலாளமித்திரன்" ஆசிரியர் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் மாநாட்டைத் திறந்துவைத்தார். பின் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் என். சங்கரன் அவர்கள் தமது வரவேற்புரையை நிகழ்த்தி, தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்களை மாநாட்டுக்குத் தலைமைவகிக்குமாறு பிரரேபித்தார். தோழர்கள் டி. பி. வேதாச்சலம், கே கே நீலமேகம் முதலியவர்கள் அதை ஆதரித்துப்பேசிய பின் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் பலத்த கைதட்டுதலுக்கிடையே திராவிடர்களின் இன்றைய பிரச்சினைகளை விளக்கியும், திராவிடர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் உரிமைக்காக பாடுபட வேண்டியதின் அவசியத்தை விளக்கியும் நீண்டதொரு சொற்பொழிவாற்றினார். பின்னர் திராவிடநாட்டுத் தனிப்பெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் 2மணி நேரம் வரை, திராவிடர் நிலைமை விளக்கியும், எதிரிகளின் சூழ்ச்சியை எடுத்துக்காட்டியும் வேவல் பிரபுவின் அறிக்கையைப் பற்றியும் அரிய சொற்பொழிவாற்றினார். இத்துடன் மாநாடு இடைவேளை உணவுக்காக கலைக்கப்பட்டது.

மீண்டும் பிற்பகல் மாநாடு 3-30 மணிக்கு தோழர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் கூடியது. பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. (தீர்மானங்கள் பின்னர் வரும்) தீர்மானங்களை விளக்கி பெரியாரும் மற்றும் பல தோழர்களும் பேசினார்கள். பிறகு களின் நன்றிகூறலுடன் மாநாடு இனிது முடிந்தது.

### பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு திருச்சி டவுன்ஹால் முன் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் சிங்கம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர்கள் ஈ. வி. கி. சம்பத், பெரியார் ஈ. வெ. ரா., சி. என். அண்ணாதுரை ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

## திருவாரூர் சுயமரியாதைச் சங்கம்

### நிர்வாகக்கமிட்டி கூட்டம்

28-6-45 தேதி மாலை மணி 7க்கு திருவாரூர் சாடார் கிடுகியில் ஷை சங்க நிர்வாகக்கமிட்டிக்கூட்டம் நடைபெறும். அதுகாலை நிர்வாக அங்கத்தினர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு அவசியம் கமிட்டி கூட்டத்திற்கு வர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாகாண மாநாடு கூட்டுதல் சம்மந்தமாகவும், அங்கத்தினர் சேர்க்கும் விஷயம்பற்றியும், 3வது ஆண்டுவிழா (ஷை சங்கம்) நடத்துவதுபற்றியும் யோசிக்கப்படும்.

## ஆலங்குடி திருமணம்

ஆலங்குடியில் 20-6-45ந்தேதி காலை 10மணிக்குப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் டாக்டர் அய்யன் பெருமாள் ஞானாம்பாள் அவர்களுக்கு சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் நாகப்பன்; எஸ். கே. சாமி, ஆசைத்தம்பி, புலவர் மணியம் மலையபெருமாள் முதலியோர்கள் சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப்பற்றி பேசினார்கள். ஷை திருமணத்தின் நினைவாக ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

## டாக்டர் அம்பேத்கார் மாணவர் இல்லம்

### திறப்புவிழா

இடம்: திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹால். நேரம்: 24-6-45 காலை 10 மணி. தலைவர்: தோழர் மீனாம்பாள் சிவராஜ். திறப்புவிழா ஆற்றுபவர்: தோழர் என். ராமனாதன், டாக்டர் அம்பேத்கார் உருவப்படத்தை, வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாச்சலம் திறந்து

## சேலம் சுயமரியாதைச் சங்கம்

12-6-45-ந் தேதி சேலம் செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச் சங்க கட்டிடத்தில் உதவித் தலைவர் டாக்டர் கே. ஆர். கோபால் தலைமையில் ஷை சங்க நிர்வாகத் தேர்தல் நடைபெற்றது. நிர்வாகஸ்தர்கள் தேர்தல் நடந்ததில் அடியில் கண்டவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தலைவர்: டாக்டர் கே. ஆர். கோபால். உபதலைவர்: (இருவர்) தோழர்கள் ஆர். எஸ். அருணாசலம், கே. ஜெகதீசன். காரியதரிசி: தோழர் எம். பி. சுப்ரமணியம். உபகாரியதரிசிகள்: (இருவர்) கே. வி. குப்புசாமி, எஸ். ராமலிங்கம். பொருளாளர்: எஸ். பி. லிங்கசாமி. ஸ்டோர்கீபர்: ஏ. ஆர். முத்தியால். நிர்வாகக்கமிட்டி மெம்பர்கள்: தோழர்கள் எம். ஆர். சித்தையன், பி. ஆர். சுப்ரமணியம், கே. ஆர். சுப்ரமணியம், பி. கே. வரதராஜுலு, சு. ம. சுப்ரமணியம், வி. முத்தியாலு, ஆர். உத்திரி, கே. கே. கொண்டய்யா, பி. தனபால், ஏ. பெருமாள், என். வி. நஞ்சப்பா. கமிட்டி மெம்பர்கள் 27 பேர்களையும், மேற்கொண்டவர்களையும் தேர்ந்தெடுக்க வேணுமாய்த் தோழர் எஸ். பி. லிங்கசாமி பிரரேபித்தார். தோழர் பி. ஆர். சுப்ரமணியம் ஆமோதிக்க ஏகமனதாக நிறைவேறிற்று. பின் பி. கே. வரதராஜுலு மேற்படி சங்கத்தின் அவசியங்களும் சங்கக் கொள்கைகளைப் பற்றியும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் சொற்பொழிவு ஆற்றிய பின் சென்ற ஆண்டு தலைவர்களுக்கும், காரியதரிசிகளுக்கும், பொருளாளருக்கும் சு. ம. சங்கத்தின் சார்பாக நன்றி கூறிய பின் கூட்டத் தலைவரின் முடிவுரையுடன் தோழர் எம். பி. சுப்ரமணியம் நன்றிகூறுதலுடன் கூட்டம் இரவு 11½ மணிக்கு முடிவுற்றது.

## கவிஞர் பாரதிதாசன் நிதி

ஷை நிதிக்கு திருச்சியில் சில தோழர்கள் ரூ. 3½-0-0 அன்பளித்திருக்கிறார்கள் என்றும் மற்றத் தோழர்களும், தாராளமாக அன்பளிக்குமாறு திருச்சி நாகம்மையார் திராவிடர் கழக செயலாளர்

ரோஜா முத்தையா

## மாயவரம் சித்தவைத்திய மாநாடு

வைத்தியவள்ளல்
ஈ. வெ. கிருஷ்ணசாமி சொற்பொழிவு

மாயவரத்தில் 1945 ஜூன் 9, 10 தேதிகளில் நடைபெற்ற சித்தவைத்திய மாநாட்டில் ஈரோடு வைத்தியவள்ளல் ஈ. வெ. கிருஷ்ணசாமியவர்கள் கொடியேற்றும்போது ஆற்றியசொற்பொழிவு:

நமது தமிழ் வைத்தியமானது கிருஸ்து பிறப்பதற்கு சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வந்ததாக, அப்பொழுதே தமிழிசை, தமிழ் வைத்தியம் முதலான கலைகளால் நமது தமிழ்நாடானது நாகரீகத்திலும் மற்ற கலைகளிலும் சிறந்து விளங்கியதாக சரித்திரவாயிலாக அறிகிறோம். ஆனதால் அதிலிருந்துதான் ஆரிய வைத்தியமும், யூனானி வைத்தியமும், ஆங்கில வைத்தியமும் உண்டாகி இருக்கவேண்டும். ஏனெனில் அவரவர்கள் இந்நாட்டிற்கு குடியேறிவந்த பிறகுதான் அவரவர்கள் கலைகளுக்கும் ஆயுள் கணித்துக்கூற முடியுமென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதாகும்.

இப்படிப்பட்ட பழமையான ஒரு கலையாகவும் மற்ற நாட்டு மக்கள் அனுஷ்டித்துவரும் வைத்திய கலைகளுக்கும் மூலாதாரமாகவுமிருந்து விளங்கி வந்திருக்கிறதென்றால் மிகையாகாது. இத்தகைய சிறப்புவாய்ந்த நம் தமிழ் வைத்தியமானது தற்காலம் விளங்கி வருவதை எண்ணிப் பார்த்தால் நாம் வெட்கப்படாமலிருக்க முடியாததற்கு மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. ஏனெனில் மேல்நாட்டார் எதை மக்களுக்கு எடுத்துக் கூறும்போதும் இது புதிதாகக் கண்டுபிடித்தது என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள், நாமோ அப்படி புதிதாக ஒன்றையும் கண்டுபிடித்து மக்களுக்குப் பயன்பெறச் செய்யாவிட்டாலும் மிகமிகப் பழமையானதாகக்கூட அவர்கள் முன் சரிவரச் செய்து அனுஷ்டித்து மக்களுக்கும் பயன்படச் செய்யாமலிருப்பதோடு அதில் இன்னது உயர்வு என்றுகூட அறியாமல் இது மிகமிகப் பழமையானது என்று சொல்லி மக்கள் முன் வெட்கப்பட வேண்டியதற்குப் பதிலாகப் பெருமையடையப் பார்க்கிறோம். நம் மட்டமம் இருந்தவாறுதான்என்னே! இவைகளைப் பற்றி எல்லாம் நமக்கு சிந்திக்கும் அனுதாபமோ, கவலையோ உண்டாகாமல் மற்ற சமூகத்தாருடன் சமமாகவோ உயர்வாகவோ வாழ இச்சிப்பதும் அவை கிட்டாதபோது கிளர்ச்சி செய்யவும் விழைகிறோம். ஆனால் அவ்விதமான இச்சைகளுக்கு முக்கியமாக வேண்டிய மூலாதாரமான அம்சங்கள் என்ன என்ன நம்மிடம் அடங்கியிருக்கிறதென்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டியது முக்கியமானதல்லவா? அப்படி ஆராய்ந்துபார்த்து வேண்டிய அம்சங்களையாவது காலம் கடத்தாமல் சேகரித்துக்கொள்ள முற்பட வேண்டுவதுடன் நமது வைத்தியக்கலையானது நாளுக்கு நாள் முற்போக்கடையும் வழிகளையறிந்து அவைகளுக்காவன செய்யவும் முற்படவேண்டியது என்பதை நம் வைத்திய சகோதரர்களின் முதற் கடமையுமாகும். இப்படிப்பட்ட அருமையான ஒரு கலை விஷயமாக நாம் கூடி இருக்கிற இக்கூட்டத்தில் உங்கள் முன்னிலையில் உங்கள் எல்லோருடைய சார்பில் இக்கொடியை உயர்த்துகிறேன்.

## சென்னை மாகாண ஷெடியூல்டு வகுப்பு மாநாடு

ஷை மாநாட்டை நீலகிரியில் தோழர் மீனாம்பாள் சிவராஜ் அவர்கள் தலைமையில் ஜூலை முதல் தேதியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக பொதுக்காரியதரிசி தெரிவிக்கிறார்.

* *

வரப்போகும் வைஸ்ராய் நிர்வாக சபையில் ஷெடியூல் வகுப்பார்களுக்கு குறைந்தது 3.(மூன்று) பதவிகள் கொடுக்கப்பட வேண்டுமென்று திருநெல்வேலிஜில்லா ஷெடியூல் வகுப்பார் கேட்டுக் கொள்கிறார்கள்.

## தஞ்சைமாவட்ட மாணவர் சுற்றுப் பிரயாணம் II

பேரன்புடையீர்! தஞ்சைமாவட்ட நகரங்களில் கூட்டம் போட விரும்பும் திராவிட கழகச் செயலாளர்கள் உடனே கீழ்க்காணும் முகவரிக்கு எழுத வேண்டுகிறேன். சுற்றுச் செலவில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தோழர் ஈ. வெ. கி. சம்பத், புலவர் அ. அ. மணியம் ஆகியோர்கள். ஜூலை 1-ந் தேதி தொடங்கி 13 வரையில் நிகழ்வுறும். விரும்புவோர் உடன் எழுதுக.

வி. எஸ். பி. யாகூப்,
செயலாளர்,
சுயமரியாதைச் சங்கம்.

## கவி பாரதிதாசன் நிதி

புரட்சிக் கவிஞருக்கெனத் திரட்டப்படும் நிதிக்குத் தாங்கள், தங்கொடை அனுப்பிவிட்டீர்களா?

இன்றே அனுப்புக! தமிழரின் தன்மானக் காவலனுக்குத் தக்கது செய்யத் தவறாதீர்!

எஸ். கிருஷ்ணராஜ் செட்டியார்,
நாமக்கல், P. O., சேலம்.

## புதுப்பேட்டை திருமண

புதுப்பேட்டை திராவிடர் கழகத்தோழர் சோ. கணேசன் அவர்களுக்கு 28-6-45ந் தேதி வியாழன் அன்று தமிழ்த் திருமணம் நடைபெறும். தோழர்கள் எஸ். கே. சாமி; கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) காஞ்சி கலியாணசுந்தரம், புலவர் ஈ. மு. மாணிக்கம் ஆகியோர் "திருமணமுறை" என்பதுபற்றிப் பேசுவார்கள். அனைவரும் வருக என மணமகன் கோருகிறார்.

## சென்னை நகர திராவிடர் கழகம்

### நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்

27-6-45 புதன் மாலை 6-30 மணிக்கு (லாட்டாக்ஸ் தியேட்டருக்கருகிலுள்ள) பிள்ளையார் கோயில் தெரு 11-வது கட்டிடத்தில் நடைபெறும். கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறது. தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமை வகிப்பார்.

காரியதரிசி.

## கோபி மருத்துவர் சங்கம்

கோபி தாலுகா மருத்துவர் சங்கத்தின் 7-வது ஆண்டு நிறைவு விழா ஜூலை மாதம் முதல் வாரத்தில் நடைபெறும்.

## தூத்துக்குடி நாகம்மாள் ஞாபகார்த்த பகுத்தறிவுக் கழகம்

நாகம்மாள் ஞாபகார்த்த பகுத்தறிவுக் கழக திறப்பு விழா, 1-7-45-ந் தேதி 5 மணிக்கு தெற்கு காட்டன் ரோட்டில் நெ. 35 என்னுள்ள கட்டிடத்தில் அமைந்திருக்கும் பந்தலில், நகராட்சி மன்ற உபதலைவர் தோழர் சி. செல்லையாடேவிட் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். அவ்வமயம் ஜவுளி வர்த்தக சங்கக் காரியதரிசி தோழர் வி. எஸ். சோமதிரவியம் அவர்கள் கழகத்தைத் திறந்துவைப்பார்கள்.

கோவில்பட்டித் தாலுகா தெ. சந்தலக்கோட்டை ஷெடியூல்டு வகுப்பு வாலிபர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா 30-5-45-ந் தேதி ஆத்தூர்க்குடி தோழர் எ. வி. ராஜையா தலைமையில் நடந்தேறியது. 1945-46-ஆம் ஆண்டிற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

## திராவிட நாட்டுச் செய்திகள்

3-6-45-ல் தாராவி தமிழ் மாணவர் மன்ற மாதாந்திரக் கூட்டம் தமிழ் முனிசிபல் பாடசாலையில் தோழர் வன்னி நாயகம் தலைமையில் நடைபெற்றது.

0 0

பொள்ளாச்சி மருத்துவர் சங்கத்தின் ஆதரவில் 9-6-45-ந் தேதி தோழர் பி. என். இராமாநுஜம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. சங்க முன்னேற்றமும் அங்கத்தினர் கடமையும் என்பது பற்றிப் பேசப்பட்டது.

0 0

கோவை ஆதிதிராவிடர் சங்க ஆதரவில் 5-6-45-ந் தேதி தோழர் பி. செ. பாபு சாஹிப் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் டி. வி. நாராயணசாமி, எல். காசிம், அந்தோணி குரூஸ், இரா. நெடுஞ்செழியன் முதலியவர்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்பது பற்றிப் பேசினார்கள்.

0 0

நன்னிலம் விவசாயத் தொழிலாளர் சங்க இந்திய தொழிலாளர் சம்மேளனம் தோழர்கள் அன்புநாதன், எம். பி. நடராஜன் முன்னிலையில் 10-6-45-ந் தேதி ஆரம்பிக்கப்பட்டது.

0 0

கோவில்பட்டி தங்கவேலு செட்டியார் ரீடிங் சமாச ஜெயபூர்த்தி கழகத்தின் மாதாந்திர வரவு செலவுக் கூட்டம் தோழர் எ. எஸ். இராஜூ அவர்கள் தலைமையில் நடந்தேறியது.

0 0

பெங்களூர் விவேகானந்த இலவச இரவு பாடசாலையின் திறப்புவிழா தோழர் சி. என். சண்முகம் பிள்ளை தலைமையில் ஆற்றிவைக்கப்பட்டது. பல தோழர்கள் கல்வியின் அவசியம் பற்றிப் பேசினார்கள். தோழர் பூ. பார்த்தசாரதி அவர்கள் "கல்வி" என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

0 0

கீழப் பொன்னூர் தமிழ் வாசக சாலை சங்கக் கூட்டம் திருவாரூர் ஆதரவில் 29-5-45-ல் தோழர் நாகராச நாயக்கர் பி. ஏ., பி. எல்., தலைமையில் கூடியது. பல தோழர்கள் பேசின பிறகு செயல் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

0 0

திருச்சி ஜில்லா முத்துராஜா மகாஜன சங்கத்தின் கிளை ஸ்தாபனம் முசிறிக்குறிச்சியில் 26-5-45-ல் திறக்கப்பட்டது. ஆரம்பவிழா தோழர் என். ஆர். சின்னத்தம்பி முத்துராஜா தலைமையில் நடைபெற்றது. ஷை ஊரிலிருக்கும் சாவடி ... முத்துராஜா சமூகத்தினர் என வெளியிடவேண்டுமென

தீர்மானிக்கப்பட்டது.

0 0

லால்குடி தாலுகா பெரம்பி தாழ்த்தப்பட்ட வகுப்பு ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் 26-5-45-ந் தேதி தோழர் ரா. வீரன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சங்கமும் சங்கத்தின் செயலும் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள்.

0 0

ஆழ்வார் குறிச்சி இருக்குந்தெரு ஆதிதிராவிடர் பெற்றோர் சங்கக் கூட்டம் 16-5-45-ல் தோழர் எஸ். பரமையா தலைமையில் நடைபெற்றது. சமுதாய விஷயங்கள் பற்றி பல தோழர்கள் பேசினார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் வழி நிற்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

0 0

23-5-45-ந் தேதி தோழர் பி. எம். சுப்பையன் தலைமையில் கூடிய பொள்ளாச்சி மருத்துவர் சங்கக் கூட்டத்தில் நடப்பு வருஷத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். சங்க உறுப்பினர்கள் மாதம் ரூ 0-4-0 சந்தா செலுத்த வேண்டுமென்றும், ஓட்டல்களில் இழிவுபடுத்துவதைக் கண்டிக்கும் தீர்மானிக்கப்பட்டது.

0 0

சிவகாசிப்புதூர் முத்துராஜா மகாஜன சங்கத்தின் பொதுக் கூட்டம் தோழர் செ. பெரியசாமி முத்துராஜா தலைமையில் 1-6-45-ந் தேதி நடைபெற்றது. வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

0 0

செங்கை மாவட்ட தமிழ்நாடு 3-வது வேடர்கள் மாநாடு 24-5-45-ந் தேதி ... தோழர் ஜே. பி. ஜோசப் தலைமையில் நடைபெற்றது. மதுரை தோழர் எ. பக்கீர்சாமி மாநாட்டைத் திறந்து வைத்தார். ஹவில்தார் எ. மாரி முத்து வரவேற்றார். திராவிடர் சமுதாயமும் சமூக கொடுமையும் என்பது பற்றி தோழர் பி. ராஜமணி பேசினார், பெரியாருடைய கருத்துக்கள் அடங்கிய பல சீர்திருத்தத் தீர்மானங்கள் நிறைவேறின. புது வருட நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

0 0

இராமநாதபுரம் தாலுகா தாழ்த்தப்பட்ட சமூக மாணவர் மாநாடு 3-6-45-ந் தேதி மனமேல்குடியில் தோழர் வீ. வீராசாமி பி. ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதுரை பாரிஸ்டர் தோழர் ஆர். எஸ். நாயுடு மாநாட்டைத் திறந்து வைத்தார். பல தோழர்கள் பேசினார்கள். இராமநாதபுரம் ஜில்லா தெருவிளக்கு ... கழகம் ... ஜில்லா கல்வி நிதி ஏற்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

0 0

பம்பாய், தாராவி தெ. இ. ஆ. தி. வாலிபர் கழகத்தின் 9வது ஆண்டு 2ஆம் திங்கள் பொதுக்கூட்டம் தோழர் எம். எம். பண்டாரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழர் செய்தித்தாள்களை ஆதரிப்பதென முடிவு செய்யப்பட்டது.

0 0

தாராவி, பம்பாய், திராவிடநாடு பகுத்தறிவு நிலையத்தின் 2ஆம் வருட 4வது மாதாந்தரக்கூட்டம் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் நடைபெற்றது. "கவி பாரதிதாசன் நிதி"க்காக நிலையத்தின் சார்பில் ரூ 5 நாமக்கல் கமிட்டிக்கு அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது. இந்து மதம், பத்திரிகை படித்தலின் அவசியம் என்பது பற்றிப் பல தோழர்கள் பேசினார்கள்.

0 0

சேலம் மருத்துவர் விதவையின் சீர்திருத்தக் கழக அமைப்புக் கூட்டம் 9-6-45-ந் தேதி தோழர் எஸ். என். கோவிந்தன் தலைமையில் நடைபெற்றது. விதவை மணமும் பெண்கள் முன்னேற்றமும் என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள். புதிய நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

0 0

பெண்ணாடம் சிவகுரு நாதன் கழகத்தின் மூன்றாம் ஆண்டு விழா 25-5-45-ந் தேதி புலவர் க. வெள்ளைவாரணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புலவர் வி. சிவக்கொழுந்து, புலவர் ஒளவை சு. துரைசாமி பிள்ளை, ஆசிரியர் சிவ. குப்புசாமி பிள்ளை ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

0 0

புலியூரான் நாடார் வாலிபர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா 1-6-45 தேதி அருப்புக்கோட்டை தோழர் அ. செ. ரத்தினவேல் நாடார் தலைமையில் நடைபெற்றது. கல்வி, சமூக சீர்திருத்தம் முதலிய பொருள்கள் பற்றி பல தோழர்கள் பேசினார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தோழர் பா. ம. பாண்டிய நாடார் பரிசு வழங்கினார்.

0 0

காத்தான்குடி அருந்ததியார் சமூக ஊழியர் சபை ஆண்டுவிழா 29-4-45-ந் தேதி கொழும்பு தமிழ்நாடு அருந்ததியர் சமூக ஊழியர் சங்கக் காரியதரிசி தலைமையில் கொண்டாடப்பட்டது.

0 0

11-6-45ல் விசாரணைக்குளம் டிவிஷன் அயன் பொம்மையாபுரம் கிராமத்தில் தோழர் அ. சு. குழந்தைவேலு முதலியார் தலைமையில் நெசவுத் தொழிலாளர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நால் நெருக்கடியும் வைத்தியர்களின் கஷ்டமும் என்பது பற்றி பேசப்பட்டது.

# தமிழாசிரியர்கள்

(புலவர் நா. மு. மாணிக்கம்)

26-5-45-க் தேதி தொடர்ச்சி

சுயராஜ்ஜிய வாதிகள் என்று கூறப்படுவோர்கள், உண்மையிலேயே வீடு தலைக்குத் தப்பாக, முட்டுக்கட்டையாக இருந்து வந்தார்கள், வருகின்றார்கள் என்பதும் அறிவுடையோர்கள் அறிந்த ஒரு உண்மையே யாகும். பேதம் வளர்க்கவும், சாதிச் சண்டை வளர்க்கவும், வர்ணாச்சிரமத்தை அடிப்படையாகக் கொண்ட இவர்கள் சொல்லளவிலே சுயராஜ்ஜியம் சுயராஜ்ஜியம் என்று கூறுவது கிளிப்பிள்ளைப் பாடந்தானே தவிர அர்த்தமில்லாதது, ஆனால் அரம்பாஷைக் காட்டுவது. பொருத்தமில்லாதது ஆனால் புன்மொழியானது. காதுக்கு இனிமையானது ஆனால் காட்டுமிராண்டித்தனத்தைப் புகுத்த வல்லது. ஆண்டானை ஓட்டும் என்பது ஆனால் அடிமைத்தனத்தை இறுக்க வல்லது, என்று திராவிடர்கள் தெளிவாக அறிவர் இனசரிகள் இல்லாமலே. இந்தப் பட்டியலிலே தமிழ்ப் புலவர்களைச் சேர்த்திருப்பது கண்டு எவரும் வருந்தவேண்டியதில்லை, ஆனால் அண்ணாச்சியின் அரசியல் ஞானம் எவ்வளவு ஆழமுடையது என்பதனைக் காட்டவல்லது. இந்தப் பட்டியலிலே இடம் பெற்றதற்குக் காரணத்தையும் தேசிய வீரர் முன்னாலேயே குறித்துவிடுகின்றார்? தமிழ்ப் புலவர்களின் தாழ்நிலைக்குரிய காரணங்களைக் கூறிவரும் காலத்தில் "தமிழ்மொழி தனித்தியங்கும் மொழி என்று சொல்லிக்கொண்டு அவசியமான பிறமொழி சொற்களைக் கையாள மறுப்பார்கள்" என்று ஒரு காரணமும் கூறுகின்றார். இது அசட்டுக் கொள்கையாம். தனித் தமிழ் வேண்டும் என்று கூறும் மறைமலையடிகளாரும் பிறரும் அசடர்களாம். இது எதையோ நினைத்துக் கொண்டு எதையோ எழுதின பைத்தியகாரத்தனம் என்றுதான் சொல்லவேண்டியதாயிருக்கும். அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த அசல் பொட்டைச்சியின் அனுபோல் போலும். தமிழ்நாட்டில் கட்டாய இந்தியைக் கட்டாயமாகப் பரப்பிய கனவான்கள் ஆட்சிக் காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் சிறார்களுடனே சிறை புகுந்த காலத்தில் திராவிடத் தோழர்கள் தம் உயிர்களைப் போக்கித் திராவிடத் திருநாட்டிகளின் தாலியைப் பறித்துக்கொண்ட ஆச்சாரியார் சென்னை மந்திரியாயிருந்த காலத்தில் கொடுமையின் வேகத்தால் கோழைகள் உள்ளமும் மிரிந்த நிலை இதுவென ஓரளவு காட்டுவது போல தமிழ்ப் புலவர்களுள்ளும் அஞ்சிமொழிந்தார் பலராக ஒரு சிலர் வெளிவந்து பங்கெடுத்துக்கொண்டதின் மருட்சியே இத்தொடராக இருக்குமென நம்புகிறேன். ஏன் என்றால் நாடு முன்னேற நாட்டிற்குப் பொதுமொழிவேண்டும். அதுவும் தாய்மொழி கட்டாயமில்லாத நிலையில் வேண்டும் என்று கூறிச்செயல் புரிந்ததற்கு ஏற்ப பாரதவீரர் கூறுகின்றார். "காலம் மாறிவிட்டதை யுணர்ந்து அதற்குக் காரணமான முன்னேற்ற அபிப்பிராயங்களை இனியாவது தமிழாசிரியர்கள் ஆதரிப்பார்கள்" என்று. காலம் மாறிவிட்டது என்பது உண்மையாய் இருக்கலாம். ஆனால் பாரதவீரரின் முன்னேற்ற அபிப்பிராயங்களை ஆதரிக்கும் காலமா? அல்லது புறக்கணிக்க வேண்டிய காலமா? பண்டிதர்கள் இருந்தித் தன்மைகள் என்ற நிலை வெகு காலத்திற்கு முன் உள்ள நிலைமை. ஆங்கிலத்தைப் பரப்ப அரசியலாரும், மேல்நாட்டுக் குருக்கள்மாரும் முனைந்து தமிழ்நாட்டில் ஆங்கிலப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திய காலத்தில் தற்காலத்தைப்போல பல்கலைக் கழகங்கள் இல்லை. தமிழ் படிப்புமில்லை. அவ்வாங்கிலப் பள்ளிக்கூடங்களுக்குத் தமிழாசிரியர்களும் தேவையாயிருந்த நிலையில் நாடகங்களில், பட்டி தொட்டிகளில், புராணங்கள் படித்துப் பொய்யைப் பெருக்கி, பொது மக்கள் அறிவை யழித்துப் போனிச் சென்ராவைபெற்ற பலரும் இடம் பெற்றனர். (ஆனால் கல்வியறிவுபெற்ற சிலர், முறையாகத் தமிழ் கற்ற ஒரு சிலர் அப்பொழுதும் இடம் பெற்றிருந்தனர் என்பதை மறுப்பதற்கில்லை) முறையாகத் தமிழைக் கல்லாதுப்பதாரும் முடியக் கையில் காசு கிடைக்கின்றதே என்ற ஆசையால் ஒருவரும், அங்குவதுமே வாழ்க்கையில் செய்யவேண்டிய பணியென்று, பாழ்பட்ட தமிழாசிரியர்கள் மலிந்த காலத்தில் வேண்டுமானால் கூற்றுத் தகுமென்பது பொருத்தமாயிருந்திருக்கலாம். இப்பொழுதோ அப்படி இல்லை. முறையாகத் தமிழ் பயிலப் பல கல்லூரிகள் முளைத்திருக்கின்றன தமிழ் நாட்டில். கல்லூரிகளின் படியிலே காலை வைப்பதற்கு முன்னமே பகுத்தறிவு என்னும் ஏட்டை உணர்ந்து செல்லுகின்றார்கள். இந்நிலையில் வெளிவரும் தமிழ்ப் புலவர்கள்தான் இந்நாளில் மலிந்திருக்கின்றார்கள். இக்கால மாறுபாட்டைத் தாய்மொழி உணரவேண்டும். அவர்களுக்கு முன்னேற்ற அபிப்பிராயம் எது? என்பது மிகமிக நன்றாகத் தெரியும்.

சுயராஜ்ஜியம் என்பது இராமராஜ்ஜியமாய், ஆரியம் தம் ராஜ்ஜியமாய் இருக்கும் என்பது போலவே முன்னேற்றம் என்பதற்கும் பாரதவீரர் அகராதியில் வேறு பொருள் கொடுக்கலாமாகவே இருக்குமென்றே வருவதற்கேற்ப இப்பொழுதுங் கூறுகின்றார் என்று அறியலாம். கட்டாய இந்தியை வரவேற்று, காங்கிரஸ் பதிகம் எழுதி சமஸ்கிருதம்கலந்த மணிப்பிரவாள நடையைப்போற்றி, பாரதமாதாவிற்குப் பள்ளி எழுச்சிப் பாடுவதே சொக்கலிங்கம் அகராதி முன்னேற்றம் என்பதற்குத் தரும் பொருள் ஆகும். புலவர்களின் அகராதி வேறு. கால வேறுபாட்டால் கருத்தழிந்த மக்களை நீ யார்? உன் நாடு என்பது யாது? உன் முன்னோர்கள் என்பது யார்? அவர்களின் பழம் பெருமையை நீ உணர்ந்தாயா? அவர் வழிவந்த நீயேன் அடிமையானாய்? இருக்க இடமுமின்றி ஏன் வெளிநாடு சென்றாய்? சென்ற இடமெல்லாம் சீரழிந்து அடிமையிலும் அடிமையாய் நீ அவமதிக்கப்படவேண்டிய அவசியமென்ன வந்தது? தமிழ் தனித்தியங்கவல்லது என்பது போலத் தமிழ் மக்கள் தனித்தியங்கவல்லார் என்பதனை ஏன் மறந்தாய்? உணர்க! புரிக! என்று தமிழ் மக்களைத் தட்டியெழுப்பி அரசியல் துறை மட்டுமல்ல, சமுதாயம், பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும் சிறந்து உயர்ந்த நாடுகளின் நெறிகளை முன் வைத்து எண்ணி, அந்நெறியில் ஏறிச்செல்லுமாறு ஏற்றமே முன்னேற்றம் என்று விரிவுரை தருவதே தமிழாசிரியர்களின் தகுந்த அகராதியாகும். அந்த அகராதிப் பொருளை மாஜி அறிஞருக்குக் கூறிக்கொள்கின்றேன். தற்காலத் தமிழ் வளர்ச்சியை அந்நியமேச், அம்மாமி என்ற அம்பிராசாரத்தின் ஹாஸ்யச் சுவை தமிழ் வளர்ச்சி என்று தெளிவாகத் தமிழாசிரியர்கள் புரிந்து எவ்வாறு தமிழ் பரப்பப்படவேண்டும் என்றும்? எது தமிழ் வளர்ச்சி என்றும்? தமிழ் மக்கள் வளர்ச்சியே (வளமே) தமிழ் வளர்ச்சி என்றும் தமிழ்ப் புலவர்கள் முடிவுக்கு வந்து திட்டங்கள் வகுக்கும்காலம் அண்மையிலேயே உள்ளது என்பதையும் அவர் அறிவாராக! ஏன்? தனித்தியங்கவல்லது என்று தமிழ் சொல்லுக்கே பொருளுண்டு என்று விரிவுரை கூறும் புலவர்கள், அச்சொல்லுக்கு அதனடியிலேயே தன்மானம் என்ற பொருளையும் அடக்கி நிற்கின்றதென்ற உண்மையையும் உணர்வர். உண்மையை உணர்ந்த அவர்கள் வறுமைப் பேய் கண்டு வாடிவிடாமல் அதனை ஓட்டம்பிடிக்கச் செய்வர். புதை கண்டு பல கனவுக பூனை பதுங்குகின்ற நிலை அடுக்களை, குப்பைக் கீரையும் இல்லாமல் அதன் தண்டுகளைப் பறித்து உப்பும் பெற வழியின்றி, நீரே உலையாக வைத்து அதனை உண்ணும் இலை உணவு; கந்தல், அச்சத்தை மூடும் ஆடை; குழந்தைகள் பால்பருக வழியின்றி இரத்தம் குன்றிய தோலினைச் சுவைத்துப் புண்ணாக்கி தேற்சுவை காணும் வாழ்வு; இத்தகைய கொடிய வறுமையிலும் செம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கும், சேலம் திராவிடர் கழகத் தலைவர் என். எஸ். ஜெகதீசன் சகோதரி செல்வமணிக்கும் திருச்சி மருத்துவர் குல சங்கத் தலைவர் டாக்டர் க. பிச்சைமுத்து அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. அதுசமயம் மணமக்களைப் பாராட்டி தோழர்கள் பொ. முத்து, க. பிச்சைமுத்து, க. ராமசாமி, ப. பொன்னுசாமி, மு. ஆறுமுகம், சேலம் பொன்னுசாமி, இ. மாணிக்கம், எஸ். கிருஷ்ணன் முதலியவர்கள் பேசியதும் பூ, சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டது. மணமக்கள் 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

சங்கரன்கோவில் குடி அரசு ஏஜண்டு தோழர் எ. என். மாணிக்கம் செட்டியார் அவர்களுக்கும் ஷைமூர் ஆவுடைநாயகம் செட்டியார் குமாரத்தி தோழர் மாரி அம்மாளுக்கும் 1-6-45ல் காலை 7 மணிக்கு திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

* *

சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த அத்திப்பட்டியில் வெள்ளூர் தோழர் பெருமாள் சேதுவராயர் அவர்கள் புதல்வர் தோழர் சிவஞானம் அவர்களுக்கும், அத்திப்பட்டு தோழர் வெங்கடாசல மணியம் பிரியர் அவர்கள் புதல்வி தோழர் விசாலாட்சி அம்மைக்கும், 31-5-45-ல் துரைசாமி சேதுவராயர் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் பூ. கணேசன், சே. நாராயணசாமி முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியில் தோழர் கோவிந்தசாமி படையாட்சி அவர்கள் நன்றி கூறுதலுடன் திருமணம் இனிது முடிந்தேறியது. இத்திருமண நினைவின் குறியாகத் 'திராவிடநாடு', 'குடி அரசு' ஆகிய இதழ்களுக்கு முறையே ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது.

* *

மீன்சுருட்டி தோழர் பாப்ப நாயக்கர் குமாரர் பி. தப்புசாமிக்கும் திருமுட்டம் தோழர் இரத்தின நாயக்கர் குமாரத்தி

---

மையைக் கண்டு வெறுத்தவைச் சொந்த னார், பெருஞ் சித்திரனார் போன்ற தலைசிறந்த புலவர் பெரி யோர்கள்; தாய்க் கிழவியின் அழுக்கு மிகுந்த பேச்சில் மயங்கிவிட்டார்கள். தன்னினத்தைப் பழித்துச் சொந்தத்தை தாங்கள் மட்டும் தங்கள் வாழ்க்கையில் சிறிது நலத்துடன் வாழ்ந்து விடலாமென்று தன்னினத்தைக் காட்டிக் கொடுக்கும் சண்டாளர்களாகிய அன்ப அறுதி. பிறந்த இடத்தின் பெருமையைக் கெடுக்கும் கோடரிக் காம்பு ஆனார் அவ்வறுங் கிழவர்.

(தொடரும்)

செல்வத்திற்கும் 25-5-45-ந் தேதி கரூர் உயர்தரப் பாடசாலை தமிழ் ஆசிரியர் தோழர் எம். என். குருசாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி பல தோழர்கள் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தனர். அங்கே நடைபெற்ற திருமணப் பாராட்டுக் கூட்டத்தில் புலவர்கள், எம். என். குருசாமி, விண்ணைத்தாயனார், பகுத்தறிவு இறுவன் வீரமணி, இராமாமிர்தத்தம்மையார் முதலியவர்கள் தமிழர் திருமணம் என்பதை விளக்கிச் சொற்பெருக்கு நிகழ்த்தினார்கள்.

* *

திருத்துறைப்பூண்டி வைசியன் கம்பெனிக்காரரும் மதிப்புக்க அன்பருமாகிய தோழர் வ. இரத்தினம் அவர்களுக்கும், அந்தோணியம்மாளுக்கும் திருத்துறைப்பூண்டியில் 7-6-45 காலை 8 மணிக்கு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

* *

4-5-45-ந் தேதி பாவலர் பாலசுந்தரம் தலைமையில் அண்டகத்துறை எஸ். ராசுக்கும் குர்ச்சவெளி கே. தைபநாயகிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். வேலாயுதம், சி. முருகேசன், வி. சுப்பையன், ஆர். ஆதிமூலம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். 'குடி அரசு' 'திராவிட நாடு' ஆகியவைகளின் வளர்ச்சிக்காக முறையே ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

கோட்டாறு பிரபல வியாபாரியும் சுயமரியாதை இயக்கத் தீவிர பற்றுதல் உடையவருமான தோழர் எஸ். சண்முகம் அவர்கள் தமது அருமைத் திருமகள் ஔவையார் அம்மையாருக்கும், ஆர். சங்கரராம் B Sc க்கும், 11-10-1120-ல் நடந்த திருமணத்தை முன்னிட்டு நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிதிக்காக ரூ 100-ம் 'குடி அரசு', 'திராவிடநாடு' பத்திரிகைக்கு ரூ. 5 வீதமும் நன்கொடை கொடுத்துள்ளார்கள்.

## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமலைப்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி
6. வ. ஆ. வேலூர்

மானேஜர்.

## மறைவு

புதுச்சேரி தோழர்கள் நம்பிக்கை மேரி லக்ஷ்மி இவர்கள் ஏகபுதல்வர் ஆர். ஆல்பேர்ட் சில நாட்களாய் நோய்வாய்ப்பட்டிருந்து 24-5-45-ந் தேதி தனது 23-வது வயதில் இயற்கை யெய்தினார் என்பதையறிந்து வருந்துகிறோம்.

* *

சிதம்பரம் தோழர் தி. கோபால கிருஷ்ணன் முதலானவர்களின் தந்தையார் தில்லைக் கண்ணு பண்டிதர் மறைவு பற்றி 19-5-45 மாலை தில்லை வெள்ளையன் தெரு அவர்கள் இல்லத்தில் தோழர் அன்பழகன் (பி. ஏ., ஆனர்ஸ்) தலைமையில் தோழர் சம்பந்தம், புலவர் செல்வத்தாண்டவன், இராமசாமி, திருஞானம் முதலானவர்கள் சீர்திருத்தச் சடங்கு முறை பற்றி விரிவுரையாற்றினார்கள். இதன் நினைவாகக் 'குடி அரசு'க்கு ரூபாய் ஒன்று நன்கொடை தரப்பட்டது.

* *

அருப்புக்கோட்டை காசுக்கடை வியாபாரியும் சீர்திருத்தவாதியுமான தோழர் கே. இராமசாமி அவர்களுடைய தாயார் முத்தம்மையார் மறைந்த முதலாவது ஆண்டு நினைவு விழாவை ஆரியச் சடங்குகளின்றி தோழர் பூ. குருசாமி அவர்கள் தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ். சண்முகப் பெருமாள், எம். எஸ். இராமசாமி ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் கே. இராமசாமி அவர்கள் நன்றி கூற விருந்துபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. நினைவு நாள் மகிழ்ச்சியின் பொருட்டு "குடி அரசு" வளர்ச்சிக்காக ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

## 'குடி அரசு' பைண்டு வால்யூம்

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5-0-0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.